DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128-2025**

**Deposition of Witness for Prosecution : D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகேஷ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.03.2026

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் எதிரி. மனு அனுமதியின் பேரில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். எனக்கு தமிழ்மொழி கொஞ்சம் தெரியும். தமிழ் கலந்த மலையாளத்தில் நான் சாட்சியம் அளிக்கின்றார். நான் தற்போது கேரள மாநிலம் கொல்லத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது நாகப்பட்டினம் முரா ஹோட்டலில் சர்வராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2020ம் ஆண்டு இதற்கு முன்பாக வேளாங்கண்ணியில் ஜான்சன் பார்க் லாட்ஜில் ரூம் பாய்யாக வேலை பார்த்தேன். கடந்த 11.08.2020ந் தேதி மாலை 5.30 மணியளவில் தீயணைப்பு நிலையம் அருகில் சாம்சனுக்கும் சதீஸ்குமாருக்கும் சண்டை நடந்தது. சாம்சனும், சதீஸ்குமாரும் ஏற்கனவே எனக்கு தெரியும். சாம்சன் வீட்டில் சதீஸ்குமார் வேலை பார்த்து வந்தார். சதீஸ்குமாருக்கு சாம்சன் வேலை பார்த்த பணம் கொடுக்காததால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. சாம்சன் வழக்கில் இறந்துபோன சதீஸ்குமாரை கத்தியால் குத்தினார் அதே கத்தியை பிடுங்கி சாம்சன் சதீஸ்குமாரை குத்திவிட்டார். அந்த பதிவு அனைத்தும் ஹோட்டலில் உள்ள CCTV கேமராவில் பதிவு இருக்கும். ஜான்சன் பார்க் லாட்ஜிக்கு

எதிரே தீயணைப்பு நிலையம் உள்ளது பக்கத்தில் மைக்கல்ராஜ், சாம்சன் வீடு உள்ளது. ஜான்சன் பார்க் லாட்ஜிலும், தீயணைப்பு நிலையத்திலும், சாம்சன் வீட்டிலும் CCTV கேமராக்கள் இருந்தது. அந்த CCTV கேமராவில் எல்லாம் பதிவாகியிருந்தது. நான் சத்தம் கேட்டு இருவரையும் காப்பாற்ற போனேன். பிறகு வேளாங்கண்ணி போலிசார் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை என்னிடம் கொடுத்து என்னை அடித்து என்னை மிரட்டி பேப்பரில் கையெழுத்து வாங்கினார். எழுதப்பட்ட பேப்பர்கள் அனைத்தும் தமிழில் எழுதப்பட்டிருந்தது அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நீதிபதியிடம் ரிமேண்ட் செய்தபோது உண்மையை சொன்னால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வழக்கில் இருந்து என்னை விடுவிக்க வேண்டிக்கொள்கிறேன். நான் எந்த குற்றமும் செய்யவில்லை. குற்றம் செய்தவர் வெளியில் இருக்கிறார். எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் தங்கவேல் லாட்ஜில் தான் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். எனக்கும் தங்கவேலுக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது. என் மீது பொய்யான தகவலை சொல்வதற்கு தங்கவேலுவிற்கு எந்தவித நோக்கமும் கிடையாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.13 வரைபடத்தில் ஜான்சன் பார்க் லாட்ஜ் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்ததாக செம்மின் ஆரோக்கியசாமி வீடு உள்ளது. அதற்கு மேற்கு செம்மின் டிரேடர்ஸ் இருக்கிறது. கிழக்கே VRJ வீடு உள்ளது. அதற்கு கிழக்கே மைக்கல்ராஜ் வீடு உள்ளது. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் CCTV கேமரா காட்டப்படவில்லை ஆனால் எல்லா இடத்திலும் CCTV கேமரா உள்ளது. அந்த இடத்தில் உள்ள வீட்டு ஓனரிடம் CCTV கேமரா

பதிவுகளை அழிக்கக்கூடாது என்று நான் மனு எதுவும அனுப்பவில்லை தற்போது நான் அந்த CCTV கேமராவின் பதிவுகளை கேட்டு மனு தாக்கல் செய்ய இருக்கிறேன். பார்வை மகசரிலும் CCTV கேமரா பற்றிய விபரங்கள் குறிப்பிடபட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இறந்துபோன நபருக்கு கத்தி குத்து ஏற்பட்டது ஜான்சன் லாட்ஜ் என்றால் இல்லை தீயணைப்பு நிலையத்திற்கு அருகில் நடந்தது. அது 11.08.2020. அது என்னை தவிர வேறு யாருக்கும் தெரியாது. Fire service ல் கத்தி குத்தி நடந்திருந்தால் அந்த Fire service ல் வேலை பார்த்த 5 நபர்கள் அதை பார்த்திருப்பார்கள். Fire serviceல் புகார் எதுவும் கொடுக்கவில்லை மற்றும் சாட்சியாக வழக்கில் விசாரிக்கவில்லை சாம்சன் Fire service காரர்களுடன் நல்ல நண்பர் என்பதால் சாட்சியாகவோ புகாராவோ கொடுக்கவில்லை. சாம்சன் மனைவி மற்றும் சம்பவம் நடந்தது தெரியுமா என்றால் தெரியாது. சாம்சன் மனைவி ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்லவில்லை. அவர் மச்சான் தான் அழைத்து சென்றார். என்னை தங்கவேல் வேலையை விட்டு நீக்கிவிடுவேன் என்று சொல்லவில்லை. தங்கவேல் வேலையை விட்டு நீக்கி தான் நான் வேலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன யாரும் எனக்கு எதிரானவர்கள் கிடையாது. VRJ ராகேந்திராவிற்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது. ஜாஸ்மின் மேரிக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது. மைக்கல் ராஜ்க்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது. பாஸ்கர், பழனிவேலுக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது என்றால் பாஸ்கர், பழனிவேலை எனக்கு தெரியாது. அந்த இருவருக்கும் எந்தவித பகையும் கிடையாது. தமிழில் எழுதப்பட்ட பேப்பரில் கையெழுத்து வாங்கப்பட்டது என்று சொல்லிருப்பது சரிதான். அதில் என்னால் போடப்பட்ட கையெழுத்து தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து. நான் சொன்னதை தான் ஆய்வாளர் எழுதி அதில் கையெழுத்து

வாங்கிகொண்டார் என்றால் என்னை ஆய்வாளர் அடித்து கையொப்பம் வாங்கினார். அதில் இரண்டு சாட்சி கையெழுத்து போட்டது பற்றி எனக்கு தெரியாது. இவை அனைத்தும் வேளாங்கண்ணி சமூதாய கூடத்தில் வைத்து வாங்கப்பட்டது. போலிசார் அடித்து துன்புறுத்தி இருந்தால் பொதுமக்களுக்கு தெரிந்திருக்கும். நான் ஜான்சன் பார்க்கில் 3 மாதம் வேலை பார்த்தேன். சதீஸ்குமார் நான் வேலை பார்ப்பதற்கு முன்பிருந்தே வேலை பார்க்கிறார் என்றால் பொய். அவருக்கு ஜான்சன் பார்க்கில் எவ்வளவு சம்பளம் என்று எனக்கு தெரியாது. சாம்சன் வீட்டில் எவ்வளவு சம்பளம் என்றும் எனக்கு தெரியாது. சாம்சன் இவ்வளவு ரூபாய் எனக்கு தரவேண்டும் என்று சதீஸ்குமார் என்னிடம் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் கத்தி எனக்கு தெரியாது இப்போது தான் பார்த்தேன். அதனால் சதீஸ்குமார் இந்த கத்தியை வைத்திருந்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. சாம்சன் இந்த கத்தியை சதீஸ்குமாரிடம் இருந்து பிடுங்கியது எனக்கு தெரியும். இந்த கத்தி என்னுடையது என்றும், அந்த கத்தியை கொண்டு தான் நான் சதீஸ்குமாரையும், சாம்சனையும் குத்தினேன் என்றால் சரியல்ல. சதீஸ்குமார் இறந்துவிட்டதால் அந்த பழியை சாம்சன் மேல் போடுகின்ற நோக்கத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனவே தான் அந்த கத்தியே தெரியாது என்று கூறிவிட்டு மழுப்பலாக சாம்சன் கத்தியை பிடுங்கியது மட்டும் தெரியும் என்று என்னை காப்பாற்றி கொள்வதற்காக நீதிமன்றத்தில் சத்திய பிரமாணம் செய்து பொய் சாட்சியமும் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.